**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்

2026ம் ஆண்டு மே திங்கள் 05-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**STC.No. 516/2023**

**C.N.R.No:TNDG18-004688-2022**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Athoor. |
| 2. | Name of the Judge | Thiru. S. Anbuthasan, B.Com., B.L. |
| 3 | Date of Judgment | 05.05.2026 |
| 4. | Case Number along with CNR Number | STC.No. 516/2023<br>C.N.R.No:TNDG18-004688-2022 |
| 5. | Name of the Parties of the case | Sub Inspector of Police, Chinnalapatti PS- Complainant |
| | | Accused – 1. Parthasarathi<br>2. Ganesan<br>3. Veeralakshmi<br>4. Santhosh |
| 6. | Date of Occurence | 02.07.2020 |
| 7. | Date of Complaint | 01.09.2020 |
| 8. | Date of Arrest if any and remand | A1 & A4 --<br>A2 & A3 - 01.05.2021 |
| 9. | Period of Remand of the Accused | -- |
| 10. | Date if release on bail | A1 -05.05.2021<br>A2 & A3 - Station Bail<br>A4 - 05.05.2021 |
| 11. | Date of Final Report | 05.05.2021 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | - |

<table>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused<br>U/s. 240 of Code of Criminal Procedure</td><td>14.08.2024</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the witnesses</td><td><table>
<tr><th>Witnesses</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW 1</td><td>10.07.2025</td><td>10.07.2025</td></tr>
<tr><td>PW 2</td><td>10.07.2025</td><td>--</td></tr>
<tr><td>PW 3</td><td>10.07.2025</td><td>--</td></tr>
<tr><td>PW 4</td><td>06.10.2025</td><td>06.10.2025</td></tr>
<tr><td>PW 5</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>PW 6</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>PW 7</td><td>06.03.2026</td><td>06.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code</td><td>--</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused<br>U/s. 313 of the Code</td><td>14.08.2024</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior courts and the results there of</td><td>--</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>14.08.2024</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>02.04.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>05.05.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>Does not arise</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>--</td></tr>
</table>

**அரசுக்காக,**
**சார்பு ஆய்வாளர்,**

சின்னாளபட்டி காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 839/2020 .... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. பார்த்தசாரதி(32/2021)
த.பெ. கணேசன்
18/7, நெல்லையப்பபுரம்,
8வது தெரு, திரு நகர்
மதுரை மாவட்டம்.

2. கணேசன்(62/2021)
ம.பெ.வீரலட்சுமி
18/7, நெல்லையப்பபுரம்,
8வது தெரு, திரு நகர்
மதுரை மாவட்டம்.

3. வீரலட்சுமி(50/2021)
க.பெ. கணேசன்
18/7, நெல்லையப்பபுரம்,
8வது தெரு, திரு நகர்
மதுரை மாவட்டம்.

4. சந்தோஷ்(28/2021)
த.பெ. கணேசன்
18/7, நெல்லையப்பபுரம்,
8வது தெரு, திரு நகர்
மதுரை மாவட்டம்.

..... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 15.09.2023 அன்று STC.No.516/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 21.04.2026-ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள்

திரு.A.M.நிஷார்பாபு, அவர்கள் ஆஜராகிய நிலையில், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் சீரிய மேற்பார்வையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு, இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

<u>**தீர்ப்புரை**</u>

**1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

i) கடந்த 25.01.2020 அன்று காலை 12.00 மணியளவில் இவ்வழக்கின் வாதி சின்னாளபட்டியில் உள்ள பெற்றோர் வீட்டின் முன்பு திவ்யஸ்ரீ அவரது பெற்றோர், தம்பி, உறவுக்காரர்கள் ஆகியோர்களிடம் நின்று கொண்டிருந்தபோது, 1 முதல் 4 எதிரிகள் வந்து வாதியின் குடும்ப பிரச்னை சம்பந்தமாக பேசி, வாதியை அவரது குழந்தையுடன் வீட்டிற்கு அழைத்தபோது, இருதரப்பினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு எதிரிகள் 4 பேரும் வாதியை பார்த்து கண்டாரேயோலி, தேவிடியா மகளே நாங்கள் கூப்பிட்ட நீ வரமாட்டியா என அசிங்கமான கெட்ட வார்த்தைகாளல் திட்டியும், குழந்தையுடன் வீட்டிற்கு வராவிட்டால் வாதியை கொலை செய்யாமல் விடமாட்டோம் என மிரட்டிய குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 506(1)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சின்னாளபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சட்டப்பிரிவு **173(2) குவிமுச**– வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ii) மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் 1 முதல் 4

குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 15.09.2023 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சட்டபிரிவு 207 குவிமுச வின் கீழ் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

iii) குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும் காலமும் வழங்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு குற்றம் பற்றி விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தார்கள்.

iv) அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறிப்பிடப்பட்டன. அ.சா.1 புகார் மனு கொடுத்தவர் ஆவார்.

**(2) <u>அரசுத் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>**

i) அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " தனக்கு 2017 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று, 6 வயதில் ஒரு மகன் உள்ளார். எனது மாமனாரும், மாமியாரும் என் கணவருடன் இருக்கக்கூடாது என கொடுமைபடுத்தினார்கள். எனது மாமனார், மாமியார் மற்றும் கணவர் ஆகியோர் நான் கர்ப்பமாக திருப்பரங்குன்றத்தில் இருக்கும்போது தனியாக வீடு வாங்கி தரவேண்டும் என்று என்னிடம் கேட்டார்கள். இப்போது எங்களால் முடியாது, தற்போது தான் கல்யாணம் செய்தார்கள் என்று சொன்னேன். கல்யாணத்திற்கு

20 பவுனுக்கு மேல் போட்டார்கள் என்றும், டெலிவரியான 10 நாட்கள் என்னை திருப்பரங்குன்றத்திற்கு 3 பேரும் என்னை கூப்பிட்டு சென்றுவிட்டார்கள். அங்கு என் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கவிடாமலும், என்னையும், என் குழந்தைதையும் தூங்கவிடாமல் கொடுமைபடுத்தினார்கள். என் அப்பா பேங்கில் ரூ.1,50,000/- கடன் வாங்கி கொடுத்தார். அதை நான் என் மாமனாரிடம் வாங்கி கொடுத்தேன். 22.12.2018 ஆம் வருடம் எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்னர் அவரது தம்பி போனில் மெசேஜ் பன்னி குழந்தையை கொடுக்க வேண்டும் என மிரட்டினார். எனது கணவர் வீட்டில் இருந்து உறவினர்கள் வந்து பேச வேண்டும் என வற்புறுத்தினார்கள். அதன்பின்னர் நான் திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன்பின்னர் எனது கணவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றத்தில் சமரசத்திற்காக அனுப்பினார்கள். அங்கு சமரசத்திற்கு எனது கணவர் நான் பணிமாறுதல் சென்றுவிட்டு வந்து அழைத்துச் செல்கிறேன் என்று சொன்னார். அதன்பின்பு அவர் வரவேயில்லை. அதன்பின்பு எனது கணவர் திருப்பரங்குன்றத்தில் புகார் கொடுத்தார். அதன்பின்னர் நான் 26.01.2020 ஆம் தேதி சின்னாளபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாருக்கு மனு ரசீது கொடுத்தார்கள், ஆனால் விசாரணைக்கு எனது கணவர் வரவில்லை. நான் நீதிமன்றத்தில் கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 மற்றும் அ.சா.3 தமது முதல் விசாரணை சாட்சியத்தில்,"எதற்காக திவ்யஸ்ரி புகார் கொடுத்தார் என்று தெரியாது . வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது" என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

iii) அ.சா.4 தனது முதல் விசாரணை சாட்சியத்தில்,"என் தங்கைக்கு

பார்த்தசாரதியை 2017 ல் திருமணம் செய்து கொடுத்தோம். கடந்த 25.01.2020 அன்று என் வீட்டிற்கு முன்பாக நானும், என் அப்பாவும் , என் தங்கையும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, எதிரிகள் நான்கு பேரும் வந்து என் தங்கையை வீட்டிற்கு வரச் சொல்லி சொன்னார்கள். பேசிக்கொண்டிருக்கும் போதே வீட்டிற்குள் சென்று என் தங்கைக்கும், பார்த்தசாரதிக்கு பிறந்த குழந்தையை வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்ல முயன்றார்கள். கண்டாரஓலி, தேவிடியா மகளே நீ வரவில்லை என்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று பார்த்தசாரதி என் தங்கையை பார்த்து மிரட்டினார். சம்பவத்தின் போது என் அப்பாவின் நண்பர் ராகவன், என் தாய் மாமா செல்லையா ஆகியோர் சத்தம் கேட்டவுடன் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மறுநாள் சின்னாளபட்டி காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம்" என சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.5 மற்றும் அ.சா.6 தமது முதல் விசாரணை சாட்சியத்தில், "தங்களிடம் காட்டப்படும் பார்வை மகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்கள் எங்களுடையது தான். இந்த கையெழுத்தை கடந்த 2020 ஆம் வருடம் ஒரு நாள் ஜீவா நகரில் உள்ள நண்பர் ராம்ஜி என்பவர் வீட்டின் முன்பு வைத்து சண்டை நடந்தது சம்மந்தமாக சின்னாளபட்டி போலிசார் விசாரித்து படம் வரைந்து எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள்" என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

v) புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 சின்னாளபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளரை(ஓய்வு) சாட்சியாக விசாரணை செய்தபோது, கடந்த 31.08.2020 அன்று நிலையப் பணியில் இருந்த போது, காவல்நிலைய குற்ற எண். 839/2020 இதச சட்டப்பிரிவுகள் 120(B), 294(b), 323, 441, 498-A, 506(1) IPC & 4 of TNPHW Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்து பின்பு சம்பவயிடம் சென்று

சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தும், LW1 முதல் LW6 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்பு 01.09.2020 அன்று இதச சட்டப்பிரிவுகள் 120(B), 294(b), 323, 441, 498-A, 506(1) IPC & 4 of TNPHW Act-ல் இருந்து இதச பிரிவுகள் 294(b), 506(1)ஆக மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், பின்னர் 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது குற்றம் புலனானதால் இதச பிரிவுகள்.294(b), 506(1)-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

v) அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக உள்ள மேற்படி குற்றத்திற்கு உட்படுத்தக்கூடிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சங்கதிகள் குறித்து 313(1)(b) கு.வி.மு.ச பிரிவின் கீழ் விளக்கி வினவியபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பொய்சாட்சி என்று மறுத்துக் கூறினார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது குற்றம்சாட்டப்பட்டவர்கள் தனது தரப்பில் சாட்சிகள் இல்லையென்று கூறினார். எனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் இல்லையென்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மேலொப்பம் செய்யப்பட்டதன் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டது.

vi) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க

வேண்டிய பிரச்சனை யாதெனில்?

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 506(1)–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

3) <u>தீர்வு</u>

i. மேற்கூறிய வழக்குகளை ஆராய்ந்து பார்க்கும்போது, அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை (Printed First Information Report) இதச சட்டபிரிவுகள் **120(B), 294(b), 323, 441, 498(A), 506(1) & 4 of TNPHW Act** என பதிவு செய்யப்பட்டு, இறுதியறிக்கை இதச சட்டபிரிவுகள் **294(b), 506(1)**–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இதச பிரிவு.294(b)ஐ பொறுத்து:–**

இவ்வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்டதாக சொல்லும் அ.சா.1 முதல் தகவல் அறிக்கையில் எதிரிகள் தன்னை என்ன விதமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும், எதிரிகள் என்ன விதமான வார்த்தைகளால் தன்னை திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

அதனை தொடர்ந்து பட்டியல் சாட்சி 2ஆன அ.சா.4 கண்டாரஓலி, தேவிடியா மகளே நீ வரவில்லை என்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று பார்த்தசாரதி என் தங்கையை பார்த்து மிரட்டினார் என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். எதிரி பார்த்தசாரதி மேற்சொன்ன ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதால் தனக்கு அவமானமாகவே, அறுவுறுப்பாகவோ இருந்தது என்று

குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

மேலும், பார்வை மகசரில் சம்பவமானது சர்ச் தெரு ஜீவா நகர் ரோட்டின் வடக்கே உள்ள வீட்டில் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7ம் தன்னுடைய குறுக்கு விசாரணையில் **உங்களிடம் காட்டப்படும் பார்வை மகசரில் வீட்டில் தான் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு சம்பவமானது பொது வெளியிலோ, அல்லது பொதுமக்கள் பார்க்கும் விதத்தில் அருகாமையில் உள்ள இடத்திலோ(Public Vicinity) நடக்கவில்லை என்று மேற்படி சாட்சியத்தின் மூலம் தெரிய வருகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.3 வரையிலான சாட்சிகளும், கண்ணுற்ற சாட்சியாக சொல்லப்படும் அ.சா.4ம் எதிரிகள் ஆபாசமாக பேசியதால் தங்களுக்கு அவமானமோ, அறுவுறுப்போ ஏற்பட்டது என்று மூன்றாம் நபர் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்காததாலும், ஆபாசமாக பேசியதாக சொல்லும் வார்த்தைகள் என்ன வார்த்தைகள் என்று அ.சா.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறாததாலும், ஆபாசமாக பேசியதாக சொல்லும் இடமானது பொது இடம் அல்லது பொது இடத்தின் அருகாமையில் அமைந்துள்ளது என்பதை அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தின் முன்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததாலும், 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட மேற்சொன்ன குற்றசாட்டு அதன் சட்ட உட்கூறுகளுக்குட்பட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இதச 506(1)ஐ பொறுத்து :–**

**அ.சா.1** தன்னுடைய முதல் விசாரணையில், எதிரிகள் தனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் **அவரது தம்பி போனில் மெசேஜ் பன்னி குழந்தையை கொடுக்க வேண்டும் என்று மிரட்டினார்** என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் குற்றசாட்டின் சாராம்சமானது கடந்த 25.01.2020ம்தேதி காலை 12 மணிக்கு வாதி சின்னாளபட்டியில் உள்ள பெற்றோர் வீட்டின் முன்பு இவ்வழக்கு சம்பவம் நடந்ததாகவும், குழந்தையுடன் வீட்டிற்கு வராவிட்டால் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது . 25.01.2020ம் தேதி நடந்த கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்வதற்கு பிறகு, **கடந்த 2021 அக்டோபர் முதல் 2023 டிசம்பர் வரை உங்கள் கணவருடன் ஒன்றாக வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து கொலை மிரட்டல் விடுத்ததன் காரணமாக தனக்கு உடனடி அச்சமும், பயமும் ஏற்பட்டு விட்டது என்பதை அரசு தரப்பில் அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கவில்லை.

மேலும், அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **2வது எதிரியான உங்கள் மாமனார் 5 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சாலை விபத்தில் காலில் அடிபட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.2 மற்ற எதிரிகளுடன் சேர்ந்து சின்னாளபட்டியில் உள்ள வாதியின் தாய் வீட்டிற்கு 25.01.2020–ம் தேதி வந்து தன்னை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றசாட்டு இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த விதத்திலும் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

அ.சா.2 மற்றும் 3 தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அ ளிக்கவில்லை. இவ்வழக்கு பற்றி தங்களுக்கு தெரியாது என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் இந்த

குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக உள்ள மேற்சொன்ன குற்றசாட்டின் சட்டஉட்கூறுக்குட்பட்டு நீதிமன்ற சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கை முழுமையாக ஒத்துரைக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அ.சா.4 தன்னுடைய முதல் விசாரணையில் 1வது எதிரி பார்த்தசாரதி அ.சா.1ஐ கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சிகள் தங்களுக்கு அவமானகவும், அறுவுறுப்பாகவோ இருந்ததாகவும், உயிர் பயம் இருந்ததாகவும் குறிப்பிட்டு வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்டதாக சொல்லும் அ.சா.1 போலிஸ் விசாரணையில் எதிரிகள் தன்னை கொலைமிரட்டல் விடுத்ததாக கூறவில்லை எனும்போது, அ.சா.4ன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று தீர்மானிக்க இயலாது. பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.5 மற்றம் அ.சா.6 இவ்வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்ட சாட்சிகள் மட்டுமே என்றும், அ.சா.5 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **நீங்கள் போலிசார் வரைபடம் வரையும் போது அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

இருப்பினும், அ.சா.5 மற்றும் அ.சா.6ன் சாட்சியத்தை வைத்து மட்டும் இந்த குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. இவ்வழக்கில் இந்த குற்றம்சாட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான இதச பிரிவு 506 (1)–ன் சட்டஉட்கூறுகளுக்குட்பட்டு அ.சா.1 நீதிமன்றம் சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 மற்றும் 3 சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ் சாட்சியாக மாறியுள்ளதாலும், பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் 6 இந்த வழக்கு சம்பவத்திற்கு தொடர்புடைய சாட்சிகள் என்று

மட்டுமே இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாலும், அ.சா.4 ன் சாட்சியமானது அ.சா.1 அளிக்காத சாட்சியத்தை முதல் விசாரணையில் கூறியுள்ளதாலும், அ.சா.1க்கு அ.சா.4 உடன்பிறந்த சகோதரர் என்பதாலும், இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டும் அ.சா.1 மற்றும் அவருடைய கணவர் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சேர்ந்து வாழ்ந்துள்ளார்கள் என்று அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்டுள்ளதாலும், எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததால் தனக்கு உடனடி அச்சம் உயிர் பயம் ஏற்பட்டது என்று அ.சா.1 நீதிமன்ற சாட்சியம் அளிக்காததாலும், 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட இந்த குற்றசாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நம்பதகுந்த வகையில் அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, **1 முதல் 4 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இதச சட்டப்பிரிவுகள் 294(b), 506(1) ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, 1 முதல் 4 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்டவர்களை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து** இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் தன்மையை கருதி, இவ்வழக்கில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவிற்கு இழப்பீட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வழக்கில் இவ்வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால், அது பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மே திங்கள் 05 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.05.12 10:38:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

**அரசுத் தரப்புச் சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. திவ்யஸ்ரி (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. ராகவன் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. செல்லையா(கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. ராம்ஜி(கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.5 | தங்கபாண்டி(பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.6 | நுரூல்ஹாசன்(பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.7 | பரமேஸ்வரன்(IO) |

**Judicial Form No : 68**

| Sl.No. | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் | 10.07.2025 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | 26.02.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3. | பார்வை மகசரில் உள்ள | 02.03.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.6 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இரண்டாவது கையொப்பம் | | | | |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 06.03.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.7 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 06.03.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.7 | அசல் |
| 6. | பார்வைமகசர் | 06.03.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.7 | அசல் |
| 7. | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை | 06.03.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.7 | அசல் |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u> –**
இல்லை

**<u>குற்றம் சாட்டப்பட்டவர்கள்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> –**
இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.05.12 10:38:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>குறிப்பு</u>:–

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.